
உ
ஓம் குஹாயநம:
(மாத வெளியீடு)
17 NOV 1943
திருப்புகழ் தொண்டன்
கிருபானந்தவாரி
கழமிர்தம் காரியாலயம்
ங்கேயநல்லூர்.
DARAN'S ENGRAVERS MADRAS

சந்தா ரூ. 2-0-0.

பொருளடக்கம்.

திருப்புகழ்

சரியையாளர்க்கு	171	கந்தர் திருவிளையாடல்	184
எதிரிலாத	177	கற்பு	189

கந்தரலங்காரம்

ஆங்காரமும்	180

கந்தரநுபூதி உரை (50-ம் செய்யுள் முதல்) மார்கழி இதழிலிருந்து தொடர்ந்துவரும்.

திருப்புகழ்த் திரட்டு.

திருப்புகழ்ப் பாடல்கள் 174ம், கந்தரநுபூதி, வேல் விருத்தம், மயில்விருத்தம், முதலியனவும் ஆறுபடைவீட்டுப் படங்களும் கொண்டது. 1 - 12 - 43ல் வெளிவரும். விலை ரூ. 1—8—0. தபாற்செலவு ரிஜிஸ்ட்ரேஷன், உள்பட அணா ஐந்து.

திருப்புகழமிர்தம் மலர்கள்

ஈசுவர, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திரபாநு ஆண்டு மலர்கள் மட்டும் கிடைக்கும். விலை மலர் பிரதி ஒன்றுக்கு ரூ. 2-0-0. சித்திரபாநு ஆண்டு மலர் மட்டும் ரூ. 2-4-0. மற்ற ஆண்டு மலர்கள் கைவசம் கிடையாது. தபாற்செலவு (ரிஜிஸ்ட்ரேஷன் செலவு உள்பட) பிரதி ஒன்றுக்கு ரூ. 0-7-0.

உமாபதி சிவாசாரியர் திரட்டி யருளிய தேவார அருள் முறைத் திரட்டு திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் எழுதிய பதவுரை விளக்கவுரையுடன் கூடியது.

விலை ரூ. 1-0-0. தபாற்செலவு ரிஜிஸ்ட்ரேஷன் உள்பட பிரதி 1-க்கு 0-7-0.

ஆறுபடைவீட்டுப்படம் கைவசம் கிடையாது.

பதில் விரும்புவோர் ரிப்ளைகார்டு அல்லது ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில் தெரிவிக்க இயலாது.

திருப்புகழமிர்தம் ஆபீஸ்,

காங்கேயநல்லூர், (Via) காட்பாடி. N

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 8. Vol 8. | சுபாநு ஹூ கார்த்திகை மீ 1௳ நவம்பர் 1943 | இதழ். 8. No 8.

திருப்புகழ்

கதிர்காமம்.

ஸ்ரீயையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகல்யோ கர்க்குமேட் டரிதாய

சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு

துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனே

புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்

புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே

கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்

கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே.

பதவுரை.

புரிசை சூழ் - திருமதில்களால் சூழப்பெற்ற, செய் பதிக்கு உரிய சாமர்த்ய - வயலூர் என்னும் திருத்தலத்துக்கு உரியவராகிய சமர்த்தரே! சத் புருஷ - சிறந்த ஆண்டகையே! விரத்து விக்ரம சூரன் - மிகுந்த வீரமுடைய சூரபன்மன், புரள வேல் தொட்ட கை குமர - பதைத்து விழுந்து புரளுமாறு வேற்படையை விடுத்தருளிய குமாரக் கடவுளே! மேன்மை திருப்புகழை ஓதற்கு எனக்கு அருள்வோனே - மேன்மை பொருந்திய திருப்புகழை ஓதுதற்கு அருள்புரிபவரே! கரிய பூக நிரள் - கரிய குரங்குக் கூட்டம், பலவின்மீதில் - பலாமரத்தின்மீது தாவி, குலை கனிகள் பீறி புசித்து - குலைகளோடு கூடிய பழங்களைக் கிழித்து உண்டு, அமர் ஆடி - ஒன்றுடன் ஒன்று போர்புரிந்து, கதலி சூதத்தினில் பயிலும் - வாழை மா ஆகிய சோலைகளில் நடமாடுகின்ற, ஈழத்தில் - ஈழநாட்டில் சிறப்புற்று விளங்கும், கதிரகாம கிரி பெருமாளே - கதிர்காம மலையில் எழுந்தருளியுள்ள பெருமையின் மிக்கவரே! சரியை யாளர்க்கும் - சரியை மார்க்கத்தினருக்கும், அ கிரியை யாளர்க்கும் - அந்த கிரியை மார்க்கத்தினருக்கும், நல் சகல யோகர்க்கும் - நலம் பொருந்திய எல்லா வகையான யோக மார்க்கத்தினருக்கும், எட்ட அரிதாய - எட்டுதற்கு அரியதானதும், சமய பேதத்தினுக்கு - ஒன்றோடொன்று பேதித்துத் தர்க்கமிடுகின்ற சமயங்களாலே, அணுக ஒணு - நெருங்க முடியாததும், மெய் பொருள் தரு - உண்மைப் பொருளாகிய சிவத்தையடையச் செய்கின்ற, பராசத்தியில் - பெரிய அருளில் அடங்கி, பரம் ஆன - பெரியதான, துரியமேல் - துரியாதீதத்தில், அற்புத பரம ஞான தனி சுடர் வியாபித்த நல்பதி - அற்புதமான மேலான சுத்த ஞானமயமாகிய ஒப்பற்ற ஜோதி நிறைந்த நல்ல பதியாக விளங்குவதும், நீடு - நித்தியமானதும், துகள் இல் - குற்றமில்லாததும் ஆகிய, சாயுச்சிய கதியை - சாயுச்சிய முத்தியை, ஈறு அற்ற - முடிவில்லாத, சொல் சுகசொருபத்தை உற்று - புகழப்படுகின்ற இன்ப நிலையைப் பொருந்தி, அடைவேனோ - அடைய மாட்டேனோ?

பொழிப்புரை.

திருமதில்கள் சூழ்ந்த வயலூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்கு உரியவராகிய சாமர்த்திய முடையவரே

சிறந்த ஆண்டகையே! மிக்க வீரமுடைய சூரபன்மன் வீழ்ந்து புரளுமாறு வேலாயுதத்தை விடுத்தருளிய திருக் கரத்தையுடைய குமாரக் கடவுளே! மேன்மையுடைய திருப்புகழைப் பாடுதற்கு அடியேனுக்கு அருள்புரிந்த வரே! கருங்குரங்குக் கூட்டம் பலாமரத்தின்மீது ஏறி பலாப்பழங்களைப் பிறிப் புசித்து ஒன்றுடன் ஒன்று போராடி வாழை மா முதலிய சோலையில் உலாவுகின்ற ஈழநாட்டில் விளங்குங் கதிர்காமம் என்னுந் திருமலையில் வாழுகின்ற பெருமிதமுடையவரே! சரியாமார்க்கத்தில் நின்றவர்க்கும், கிரியாமார்க்கத்தில் நின்றவர்க்கும், நலம் பொருந்திய எல்லா வகைப்பட்ட யோகமார்க்கத்தில் நின் றவர்க்கும் எட்ட அரிதானதும், ஒன்றோடொன்று பிணங் கும் சமயங்களுக்கு நெருங்க முடியாததும், உண்மைப் பொருளாகிய சிவத்தை அடையச் செய்கின்ற பெரிய அரு ளாகிய சத்தியில் அடங்கி, மேலான துரிய நிலைகடந்த மேல் நிலையில், அற்புதமான பெரிய ஞானமயமாகிய ஒப் பற்ற ஒளி நிறைந்த நன்மை மிக்க இடமும், நித்திய மானதும், குற்றமில்லாததுமாகிய சாயுச்சிய முத்தியை, முடிவில்லாத புகழுடைய இன்பவடிவத்தைப் பொருந்தி அடியேன் அடையமாட்டேனோ?

விரிவுரை.

சரியை:—

ஆலயத்தை அலகிடுதல், மெழுகல், பூமாலை தொடுத் துக் கொடுத்தல், விளக்கிடுதல் முதலிய திருத்தொண்டு செய்தல்.

நந்த னப்பணி யியற்றுநர் நறுமலர் பறித்துப்
பந்த முற்றிடத் தொடுத்தணி பவர்தளிப் பரவ
முந்த நெய்விளக் கிடுபவர் பிறபணி முடிப்போர்
எந்த வானருங் கீழ்ப்பட மேற்படு மியல்பார்.

—திருப்பெருந்துறைப் புராணம்.

இதனை, "புறத்தொழிலால் உருவத் திருமேனியை வழிபடுதல்" என்று சுருங்கச் சொல்லலாம்.

கிரியை:—

இறைவனை உள்ளம் உருகிப் பாடுதல், மந்திரத்தை செபித்தல், திருவுருவத்தைப் பூசித்தல் முதலியன.

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

—அப்பர்.

இதனை, "அகத்தொழில் புறத்தொழில் இரண்டானும் உருவாருவத் திருமேனியை வழிபடுதல்" என்று சுருங்கச் சொல்லலாம்.

சகலயோகர்:—

மந்திரயோகம், ஆதாரயோகம், நிராதாரயோகம், கர்ம யோகம், பக்தியோகம், ஹடயோகம், ராஜயோகம், சிவ யோகம் முதலியன.

அருவத் திருமேனியை அகத்தொழிலால் மட்டும் வழிபடுதல்.

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

—பெரியபுராணம்.

ஆக இந்தச் சரியை கிரியை யோகங்களாலேயே ஆனந்தாநுபவ முத்தி யுண்டாக மாட்டாது. ஞானத்தாலேயே யுண்டாகும். சரியை முதலியன ஞானத்தைப் பெறுவதற்குச் சாதனங்கள்.

ஞானம் அறிவு மாத்திரத்தால் உரு, அருவுரு, அரு ஆகிய மூன்றையுங் கடந்த அகண்டாகார ஜோதிமயமான திருமேனியை வழிபடுதல்.

ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றல்ல
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. —திருமந்திரம்.

அரியவிம் மானிட யாக்கை பெற்றவர்
கருமயோ கங்களாற் காலந் தள்ளுவர்
உரிய மெய்ஞ் ஞானயோ கத்தி னலரண்
துரிய ஞானத்தினைச் சேரி யார்களே.
—பதிபசுபாச விளக்கம்.

"சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின்
ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" —சித்தியார்.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவாகமஞ் சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவர். —சித்தியார்.

சமயபேதம்:—

சமயங்கள் பல. அவை ஒன்றுடன் ஒன்று பிணங்குவனவே.

"விபரித சமய கலைகளு மலமலம்"

"கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்" —திருப்புகழ்.

"பேதித்த சமயமோ ஒன்றுசொன படியொன்று
பேசாது" —தாயுமானார்.

துரியமேலற்புத பரமஞானத்தனி சுடர்வியாபித்த நற்பதி:—

கற்சுவர் போன்ற தூலதேக வுறையும், பளிங்குச்சுவர் போன்ற சூக்குமதேக வுறையும், மெல்லாடை போன்ற குணசரீர வுறையும், பாம்புரி போன்ற கஞ்சுக சரீர வுறையும், பால்நுரை போன்ற காரண சரீர வுறையு மாகிய ஐவகை யுறையினையுங் கவித்துக்கொண்டு ஜீவான்மா வசிக்கின்றது. இங்ஙனம் வகுக்கப்பட்ட அன்னமயகோச மென்ற தூல சரீரத்தின்கண் ணின்று ஆன்மாவின் அறிவு விளங்கப் பெறுகின்ற அவசரம் ஜாக்கிரம் எனப்படும். அப்போது கருவி 35.

மெய் வாய் கண் நாசி செவி (ஞானேந்திரியம்) 5
வாக்கு பாணி பாதம் பாயுரு உபஸ்தம்
(கன்மேந்திரியம்) 5
மனம் புத்தி சித்தம் அகங்காரம் (கரணம்) 4

சப்த பரிச ரூப ரச கந்தம் (தன்மாத்திரை)	5
வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் (கன்மம்)	5
பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் (வாயு)	10
புருடன்	1
ஆக	35.

பிராணமயகோச மென்ற சூக்கும சரீரத்தின்கண்ணின்று ஆன்மாவின் அறிவு விளங்கப்பெறுகின்ற அவசரம் சொப்பனம் எனப்படும். அப்போது கருவி 25.

கன்மேந்திரியம் 5 ம், ஞானேந்திரியம் 5 ம்
நீங்க ஏனைய தத்துவங்களாம்.

மனோமயகோச மென்ற குணசரீரத்தில் ஆன்மாவின் அறிவு விளங்கப் பெறுகின்ற அவசரம் சுழுத்தி எனப்படும்.

அப்போது கருவி சித்தம் பிராணன் புருடன் என்ற 3. வாயு 9 வசனாதி 5 தன்மாத்திரை 5 கரணம் 3 ஆக 22 நீங்கியது.

விஞ்ஞானமயகோச மென்கின்ற கஞ்சுக சரீரத்தில் ஆன்மாவின் அறிவு விளங்கப் பெறுகின்ற அவசரம் துரியம் எனப்படும்.

மேற் கூறிய மூன்றில் சித்தமும் நீங்க,
பிராணனும் புருடனு மாகிய கருவி 2.

ஆனந்தமயகோச மென்கின்ற காரண சரீரத்தில் ஆன்மாவின் அறிவு விளங்கப் பெறுகின்ற அவசரம் துரியாதீதம் எனப்படும். அப்போது பிராணனும் நீங்க புருடன் மட்டும். கருவி 1.

இங்ஙனம் கருவிகள் ஒடுங்கி துரியாதீதத்தில் ஆன்மா சுத்த அஞ்ஞான மயமாய் நிற்கும் அவசரத்தினையே கீழாலவத்தை என்பர்.

இனி இறைவனுடைய அருட்சத்தி யானது சுத்த சுயம்பிரகாசமாய் ஆன்மாவினையும், அவ்வான்மாவினைப் பொதிந்த ஆணவத்தினையும், அவ்வான்மாவிற்கு ஐந்து சட்டைகளான பஞ்ச கோசத்தினையும் வியாபித்துக் கொண்டு பேரொளிப் பிழம்பாய் நிற்கும். இந்த நிலையே மெய்ஞ்ஞானநிலை.

சாயுச்சியகதியை .... அடைவேனோ :—

துரியாதீத நிலையை யடைந்து, "எல்லாமற என்னை யிழந்தநலம்" என்ற தன்மையை யுற்று இன்பவடிவாகி பரகதியை யடைய வேண்டும்.

மேன்மைத் திருப்புகழை யோதற்கெனக் கருள்வோனே:—

திருப்புகழ் முருகவேள் திருவருள் மயமாக விளங்குவதால் மேன்மை என்ற அடை தரப்பட்டது. அதனைப் பாடுதற்கு அருணகிரியார்க்கு வயலூரில் முருகவேள் அருள் புரிந்தனர்.

"பாத பங்கய முற்றிட உட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமன்பது செய்ப்பதி யிற்றந் தவனீயே"
—திருப்புகழ்.

கருத்துரை.

வயலூரா! சூரனை யடக்கிய வீரரே! கதிர்காமரே! துரியாதீதநிலை யுற்று இன்புருவ மாகிய முத்தி பெற அருள்புரிவீர்.

திருப்புகழ்.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

பதவுரை.

கதிரகாம வெற்பில் உறைவோனே – கதிர்காமம் என்ற திருமலையில் எழுந்தருளி வாழ்பவரே! கனகமேரு ஒத்த - பொன் மேருகிரி போன்று உயர்ந்த, புயவீரா - தோள்களையுடைய வீரரே! மதுர வாணி உற்ற - இனிய நாதத்துடன் கூடிய, கழலோனே - வீரக் கழலை யணிந்தவரே! வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே – பாண்டியனது கூனை நிமிர்த்தருளிய பெருமையின் மிக்கவரே! எதிர் இலாத பத்தி தனை மேவி - ஒப்பில்லாத அன்பை யடைந்து, இனிய தாள் நினைப்பை – தேவரிருடைய இனிய திருவடிகளின் நினைவை, இருபோதும் - இரவும் பகலும், இதய வாரிதிக்கு உள் உறவு ஆகி - இருதய மாகிய கடலின்கண்ணே பதிய வைத்து, எனது உள்ளே சிறக்க - அடியேனுடைய உள்ளத்திலே சிறக்குமாறு, அருள்வாயே - திருவருள் புரிவீர்.

பொழிப்புரை.

கதிர்காமம் என்னுந் திருமலையில் எழுந்தருளி யிருப்பவரே! பொன்மேருமலை போன்ற திருப்புயங்களை யுடைய வீரரே! இனிய ஒலியினை யுடைய வீரகண்டாமணியைத் தரித்த திருவடியை யுடையவரே! பாண்டிய னுடைய கூனை நிமிர்த்தருளிய பெருமித முடையவரே! இணையற்ற அன்பை யடைந்து, தேவரீருடைய சித்தத்தில் நித்திக்கும் இனிய திருவடிகளின் நினைவை அல்லும் பகலும் இதயமாகிய கடலின்கண் டதியவைத்து அடியேனுடைய உள்ளத்திலே சிறக்குமாறு திருவருள் புரிவீர்.

விரிவுரை.

எதிரிலாத பத்தி:—

பத்தி - அன்பு. சமானமில்லாத அன்பு உண்டாக வேண்டும் என்றார். கண்ணப்பருடைய அன்பு நிகரிலாதது. "கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்றார் மணிவாசகரும்.

"பொங்கிய ஒளியினீழல் பொருவிலன் புருவமானார்"
—பெரியபுராணம்.

"அன்பேசிவமா யமர்ந்திருப்பாரே" என்ற அமுத வாக்கின்படி இறைவன் அன்பு வடிவாக விளங்குகின்றனன்;

அன்பு வடிவாகிய ஆண்டவனை அன்புநெறி ஒன்றினாலேயே எளிதில் அடையலாம்.

"பத்தி வலையிற் படுவோன் காண்க" — திருவாசகம்.

"அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே" - திருவருட்பா.

இனிய தாள் நினைப்பை:—

கனி, கரும்பு, சர்க்கரை, தேன் முதலியவை நாவிற்கு மட்டும் இனிக்கும்; இறைவன் திருவடி, நினைக்குந்தோறும், பேசுந்தொறும், காணுந்தொறும், எப்பொழுதுந் தித்திக்கும்.

கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினுந்
தனிமுடி கவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. — அப்பர்.

"பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்ந்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி யணைத்தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே"
—திரு அருட்பா.

இருபோதும்:—

இறைவன் திருவடியை அல்லும் பகலும் இடையீடின்றி நினைக்க வேண்டும்.

"தினைத்துணைப் பொழுதும் மறந்துய்வனோ"

"வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே"

"இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க"

என்ற அநுபவ அமுத வாக்கியங்களை யுன்னுக.

இதயவாரிதி:—

இதயமாகின்ற கடலுள் இறைவன் திருவடியாகிய மந்தரகிரி சேர்வதால் திருவருளமுதம் தோன்றும்.

மதுரவாணியுற்ற கழல்:—

வாணி - சொல். அது ஆகுபெயராக ஒலியை யுணர்த்திற்று. பெருமானுடைய திருவடியிலுள்ள வீரக்கழல்

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(158-ம் பக்கத் தொடர்ச்சி)

(55) ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யமதூதருக்கே.

பதவுரை.

ஆங்காரமும் அடங்கார் - அகங்காரம் மமகாரம் (நான், எனது) என்ற இரண்டையும் ஒழிந்து அருளனுபவத்திலே அடங்கப் பெறார்: ஒடுங்கார் - பொறி புலன்கள் ஒடுங்கப்பெறார்; பரம ஆனந்தத்தே தேங்கார் - பேரின்ப வெள்ளத்திலே முழுகி நிறைவுபெறார்; நினைப்பும் மறப்பும் அறார் - நினைப்பையும் மறப்பையும் அற்று சமாதி நிலையில் பொருந்தார்; தினை போது அளவும் - ஒரு தினையளவு காலமாயினும், ஓங்காரத்து உள் ஒளிக்கு உள்ளே - ஓங்காரமாகிய நாதத்துக்குள்ளே ஒளிரும் ஜோதிக்குள்ளே, முருகன் உருவம் கண்டு - முருகப்பெருமானுடைய திருவுருவத்தைத் தரிசித்து, தூங்கார் - ஏனைய கருவிகரணங்களெல்லாம் ஓய்ந்து அறிவு மாத்திரம் ஒளிசெய்ய அப்பரவச நிலையில் தூங்கார்; தொழும்பு செய்யார் - தொண்டு செய்யார்; யமதூத

இனிய நாதத்தைத் தருகின்றது. இனி, வாணி என்பதற்கு சரஸ்வதி யென்றே பொருள்கொண்டு, சரஸ்வதி தேவி தொழுது அடைந்த திருவடியெனினும் பொருந்தும்.

கருத்துரை.

கதிர்காம வேலரே! பன்னிரு புயாசலரே! வீரக்கழலணிந்த வித்தகரே! வழுதி கூனிமிர்த்த வரதரே! ஒப்பற்ற அன்புசெய்து உமது திருவடியை உள்ளத்தில் அமைத்து உயர்கதிபெற அருள்புரிவீர்.

ருக்கு என் செய்வார் - மேற்கூறியவைகளில் ஒன்றையேனும் அடையாமையால் இயமனுடைய தூதருக்கு யாது பரிகாரம் செய்வார்கள்?

விரிவுரை.

ஆங்காரமும் அடங்கார்:—

அகங்காரம் என்பது ஆங்காரம் என வந்தது. அகங்காரம் என்பது நான் என்ற அகப்பற்று. ஆங்காரமும் என்றதனால் மமகாரமும் வருவிக்கப்பட்டது. எதிரது தழீஇய எச்சஉம்மை. மமகாரம் என்பது எனது என்ற புறப்பற்று. இவ்விரண்டுங் கெட்டாலன்றி திருவருள் வாய்க்காது.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். —திருக்குறள்.

யானென தெனச்சருவு மீனசமயத் தெவரும்
யாருமுணர் தற்கரிய நேர்மைக் காரணும் —வகுப்பு.

"நான் காணு இடத்ததனைக் காண்பே மென்று
நல்லோர்கள் நவில்கின்ற நலமே" —அருட்பா.

ஒடுங்கார்:—

நான் எனது என்ற இருவகைப் பற்றையும் அற்றபின் பொறி புலன்களை யொடுக்கி அருளநுபவத்தில் ஒடுங்குதல் வேண்டும்.

ஐந்தில் ஒடுங்கில் அகவிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. —திருமந்திரம்.

ஆமையைப்போல் ஐம்புலனை யடக்கிய இடத்தில் ஒரு பெரிய சுகம் ஆரம்ப மாகின்றது. ஒருமனிதன் வெளியிலே கண்டவாறு அலைந்து திரிகின்றபோது துன்பம் உண்டாகும். வீட்டிலே போய் நிழலில் சற்று ஆறுதலாக அமர்ந்தவுடன் மகிழ்ச்சியாக இருக்கின்ற தல்லவா? அதுபோல் புலன்கள் வெளிப்பட்டுழலுங்கால் கவலை யுண்டாகின்றது. அவைகளை அகமுகப்படுத்தும்போது ஆறுதலும் ஆனந்தமும் உண்டாகின்[illegible] திருமூலர் பிறிதோரிடத்தில்,

முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே.

என்று அருளிச் செய்தனர்.

"ஐங்கரனை யொத்தமன மைம்புல மகற்றிவளர்
அந்திபக லற்றநினை வருள்வாயே"
—திருப்புகழ்.

பரமானந்தத்தே தேங்கார்:—

மேற் கூறியவாறு பற்றற்று புலனொடுங்கப் பெற்ற போது பெரிய ஆனந்தம் உண்டாகும். அந்தப் பேரானந்தத்தில் நிறைவு பெற்று நிலைபெறுதல் வேண்டும். தேங்குதல் – நிறைவு பெற்று அசைவற் றிருத்தல். "தண்ணீர் தேங்குகின்றது" என்ற உலக வழக்கையும் உன்னுக. ஒரு கணப்பொழுதில் இன்பம்போல் தோன்றி மறு கணத்தில் அழியும் இன்பத்தினை நாடாமல், நினைக்குந்தொறும் பேசுந்தொறும் இன்பம் பயக்கும் அப் பரம சுகத்தை நாடுவோமாக.

நினைப்பு மறப்பு மறார்:—

நினைப்பும் மறப்பும் அற்ற நிலையே சிறந்த நிலை. இதனை வடநூலார் 'சகலகேவலம்' என்பர். நினைப்பைப் பகலென்றும் மறப்பை இரவென்றுங் கூறுவர். நினைப்பதும் மறப்பது மாகவே நாம் இருக்கின்றோம். இவ் விரண்டும் அற்ற நிலையில் சித்திர தீபம்போல் நிலைத் திருப்பதாம். இந் நிலையை நம் அருணகிரிநாத சுவாமிகள் பல இடங்களில் இனிது கூறுகின்றனர்.

"இராப்பக லற்ற விடத்தே இருக்கை எளிதல்லவே"
—அலங்காரம்.

"கருதா மறவா நெறி காணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்" —அநுபூதி.

அந்திபக லென்றிரண்டையு மொழித்
திந்திரிய சஞ்சலங்களை யறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடி. -திருப்புகழ்.

பலகாலம் பயின்றவர்க்கே இந்நிலை கைகூடும். காண்பான் காட்சி காட்சிப்பொருள் ஆகிய முப்பாழுந் தாண்டி அப்பாலுக் கப்பா லாகிய சமாதி நிலையே இது. இது கைவரப்பெற்றாரே பெரியார்.

சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மானந்த
நோக்கும் பிறப்பற நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல் செய்பாவே. —திருமந்திரம்.

தினைப்போதளவும் ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருக னுருவங் கண்டு தூங்கார்:—

தினை என்பது ஓர் சிறிய தானியம். ஒரு சிறிய அணுவளவு நேரமேனும் ஓவியம்போல் கருவி கரணங் கழன்று தூங்கவில்லையே என்று சுவாமிகள் வருந்துகின்றனர்.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். —திருக்குறள்.

தினைப்போ தளவுந் தூங்கார்; ஓங்காரத்துள் ளொளிக் குள்ளே தூங்கார்; முருக னுருவங் கண்டு தூங்கார். என்று கூட்டுக.

ஓங்காரத்துள் உள்ளொளியில் விளங்கும் முருகப் பெருமானுடைய திருவுருவத்தை அறிவுக் கண்ணால் கண்டு வேறு ஒன்றையுங் காணாதவராகி சிறிது நேரமேனுந் தூங்கவேண்டும்.

அன்பர்கள் இவ் வரியை நன்கு சிந்தித்து அநுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

ஆங்கார மும்மடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கி சுகம்பெறுவ தெக்காலம். -பத்திரகிரியார்.

தூங்கிக் கண்டார் சிவலோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலைசொல்வ தெவ்வாறே. - திருமந்திரம்.

தொழும்பு செய்யார்:—

முடிவாக நிருவிகற்பசமாதி கூடிய மெய்ஞ்ஞானிகளும்

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

முத்தித் தலங்கள் ஏழு; அவற்றுட் சிறந்தது காஞ்சி. உமாதேவியார் முப்பத்திரண்டு அறங்களையும் ஆங்கு செய்தனர் எனின் அதன் பெருமை அளவிடற் பாற்றோ? தொண்டை நன்னாட்டிற்குத் தலைநகராயது. ஏகாம்பர நாதரும், காமாட்சி யம்மையாரும், வரதராஜர் என்ற திருமாலும், குமரவேளும் திருக்கோயில்கொண்டு எழுந்தருளிய அருமை சிறக்கது. அவற்றுள் அமரர் போற்றுங் குமர

வாசனுமலர் தாக்கா திருக்கும்பொருட்டு இறைவனுடைய ஆலய வழிபாடுந் திருத்தொண்டுஞ் செய்வர்.

சிவமாம் பேறு பெற்ற எம் பரமாசிரிய ராகிய மணிவாசகப் பெருந்தகையாரும்,

> "புத்தேளிர் கோமானின் திருக்கோயில்
> தூகேன் மெழுகேன் கூத்தாடேன்,

என்று அருளிச்செய்தனர்.

என்செய்வார் யமதூதருக்கே:—

ஆங்காரம் அடங்கல், புலன் ஒடுங்கல், பரமானந்தத்தே தேங்கல், நினைப்பும் மறப்பும் அறல், நினைப்போதளவும் ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகன் உருவங் கண்டு தூங்கல், தொழும்பு செய்யல், ஆகிய ஆறனுள் ஒன்றேனும் செய்யாதார் எம தூதருக்கு என் செய்வார்? என்று சுவாமிகள் வினவுகின்றனர்.

கருத்துரை.

பற்றற்று, புலனொடுங்கி, பரமானந்த முற்று, சகல கேவலம் அற்று, முருக னுருவங் கண்டு ஓங்காரத்துள் தூங்கி, தொழும்பு செய்து காலதூதரை வென்று வாழவேண்டும்.

கோட்டம் மிகவும் கவினுடையது. "சிவபெருமானால் நிறுவப் பெற்றது சிவாகமம்; சிவாகமத்தால் நிறுவப் பெற்றவர் சிவபெருமான். சிவாகமம் சிவபெருமான் என்ற இரண்டாலும் நிறுவப் பெற்றவர் சுத்த ஆன்மாக்களாகிய சிவ அந்தணரென்னும் சைவாசாரியர்" என்னும் பொருள்படா நிற்கும்,

சிவேந ஸ்தாபிதச் சைவ சைவேந ஸ்தாபிதச் சிவ:
சிவசைவ விசுத்தாத்மா சசிவ ப்ராஹ்மணோ குரு:!!

என்ற காரணாகம வசனத்தால் புகழப்பெற்ற ஆதிசைவர் திருமரபிலே (ஏழாம் நூற்றாண்டிலே) காளத்தியப்ப சிவாசாரியர் என்ற அருந்தவப்பெரியார் இருந்தார். அவர்

"ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வாழ்
ஆறுமா முகப்பிரா னடிகள் போற்றி"

அப் பெருமானை அளவற்ற அன்புடன் பூசித்து வந்தார். எல்லா நற்குணங்களும் அவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. அவர் செய்த வரம்பிலாத மாதவமே ஓருருக் கொண்டாற்போல் அவருடைய மனைவியார் கருக் கொண்டனர். சைவம் விளங்கவும், எந்தை கந்தவேள் பெருமை வெளிப்படவும், திருவருள்நெறி தழைக்கவும் ஓர் நன்னாளில் இளங்கதிரென ஆண் மகவு பிறந்தது. காளத்தியப்ப சிவாசாரியர் தமது தவத்தா லுதித்த தனயருக்கு கச்சியப்பர் என்று பேரிட்டுப் பெரிதுவந்து வளர்த்தனர்.

கச்சியப்பர் இனிது வளர்ந்தனர். மறைகள் நான்கும் ஆகமங்கள் இருபத்தெட்டும் புராணங்கள் பதினெட்டும் ஏனைய எல்லாக் கலைகளையும் ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தனர். "அறிந்ததற்கழகு அடங்குதல்" என்றபடி அடக்கத்திற்கு அணிகலனாகத் திகழ்ந்தனர். வடமொழி தென்மொழி என்ற இருமொழிகளிலுங் கரைகண்ட நமது கச்சியப்ப சிவாசாரியர் பிதாவைப்போல் குமரகோட்டத்தில் எழுந்தருளிய எந்தை கந்தவேளே முழுமுதற் கடவு

ளென்று துணிந்து அப் பரமபதியை சிவாகம விதிப்படி பூசித்துவந்தனர்.

சைவசித்தாந்தமே பொருளென் றுணர்ந்த அன்புவடிவாகிய அவருடைய கனவில் கந்தப்பெருமான் எழுந்தருளி "அப்பனே! வடமொழிக் கந்தபுராணத்துள்ள எமது புகழ்ச் சரிதையைத் தமிழிற் பாடுதி" என்று கட்டளையிட்டு, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துத் தந்து மறைந்தருளினார். சுவாமிகள் விழித்தெழுந்து ஐயன் அருளை யெண்ணி விம்மிதமுற்று உள்ளங் கசிந்து கண்ணீர் மல்கி "எம்பெருமானே! நாயினுங் கடையேனும் அடியேனுக்கு இப் பெரிய பணியைத் தந்தருளினீர்? நின் கருணை யிருந்தவா றென்னே! நின் திருவருளே துணை" என்று வாழ்த்தி வணங்கி, நன்னாளில் அம்மாபெரும் புராணத்தைப் பாடத் தொடங்கினார்.

புராணம் பதினெட்டுக்கும் கிரந்த எண் நான்கு லட்சம்; கந்தபுராணத்திற்கு மட்டும் ஒருலட்சங் கிரந்தம்; அதனாலேயே அதன் பெருமை விளங்கும்; ஐம்பது கண்டங்களையும் ஆறு சங்கிதையையும் உடையது.

சனற்குமார சங்கிதை	55000	கிரந்தம்.
சூத சங்கிதை	6000	,,
பிரம சங்கிதை	3000	,,
விட்டுணு சங்கிதை	5000	,,
சங்கர சங்கிதை	30000	,,
சூர சங்கிதை	1000	,,

ஆக சங்கிதை 6க்கும் கிரந்த எண் 100000.

சங்கரசங்கிதை 12 கண்டங்கள்; அவற்றுள் முதற் கண்டமாக விளங்குவது சிவரகசிய கண்டம். அதன் கிரந்த எண் 13000 இச் சிவ ரகசிய கண்டம் ஏழு காண்டங்களை யுடைத்து; அவை யாவன, உற்பத்திக்காண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம், என்பன.

இவற்றுள் முதலிலுள்ள ஆறுகாண்டங்களை மட்டும் தமிழில் நாள்தோறும் பாடுவார். பாடி எழுதிய ஏட்டை குமரகோட்டப் பெருமான் திருவடியில் வைத்து அருச்சித்துத் திருக்கதவந் திருக்காப்பிட்டுச் செல்வார். மறுநாட் காலையில் ஆன்மார்த்த வழிபாடுகளை முடித்துத் திருக்கோயிற் கதவு திறந்து பார்க்குங் காலத்தில் ஆங்காங்கு பாடல்களில் திருத்தஞ் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு அதிசயித்து ஆண்டவனுடைய அருளை உன்னி உள்ளம் உருகுவார். இங்ஙனம் மேற்கூறிய ஆறுகாண்டங்களையும் சொற்சுவை பொருட்சுவை பத்திச்சுவை ஞானச்சுவை முதலிய எல்லாச் சுவைகளும் பொருந்த தேனினுமினிய தீந்தமிழ்ப் பாடல்களால் பாடி முடிவு செய்தனர். 10346 பாக்கள்கொண்ட அப் புராணம் மிக்க அருளழகும் பொருளழகும் பொருந்தி விளங்கிற்று.

அடியார்கள் ஒருங்கு கூடி அவ்வரிய நூலை அரங்கேற்றுதல் வேண்டுமென்று விழைந்தனர். குமரகோட்டக் கோயில் திருமண்டபத்தை தோரணம் விதானம் ஆகியவைகளால் அலங்கரித்தனர். கச்சியப்ப சிவாசாரியர் கந்த புராணத் திருமுறையை அருச்சித்து வழிபட்டு உயர்ந்த பீடத்திருந்து முதற் காப்புச் செய்யுளை யெடுத்து "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்ற பாடலைக் கூறி, "திகழ் தசக்கர செம்முகம் ஐந்து உளான்" என்று பிரித்து, "விளங்காநின்ற பத்துத் திருக்கரங்களையும், செவ்விய ஐந்து திருமுகங்களையும் உடைய சிவபெருமான்" என்று பொருள் கூறினார். அவைக்கண் கூடியிருந்த புலவருள் ஒருவர் எழுந்து, "'திகழ்தசக்கரம்' என்பது 'திகடசக்கரம்' எனப் புணர்தற்கு விதி யாண்டுளது? தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிற் கண்டிலேம்" என்று மறுத்து வினவினர். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், "அன்பரே! அது நம்வாக்கன்று; ஈண்டுள்ள எந்தை கந்தவேள் கனவில் எடுத்துக் கொடுத்தருளிய அருட்டிருவாக்கு" என்றார். புலவர், "சுவாமீ! தாங்கள் கூறுவது உண்மையாயின், இறைவனும் விதிக்கு மாறாகக் கூறுவது

நியாயமில்லையே? ஆதலால் விதி கூறியே யாகவேண்டும்" என்றார். சுவாமிகள், "ஐய! இதற்கு நாளை விடை பகர்வோம். வினாக்கள் அனைத்துக்கும் விடைகூறும் பெருமானாகிய விடை யுடைய விமலனது திருக்குமாரன் திருவருள் துணை செய்யும்" என்று அரங்கேற்றத்தை அந்த அளவில் நிறுத்தினார். அவை கலைந்தது. சுவாமிகள் அன்றிரவில் பெருமானை அன்புடன் பூசை செய்து ஒன்று மருந்தாது, "ஆறுமுகததரசே! அருட்பெருங்கடலே! நின்னை யன்றி வேறு துணையில்லை" யென்று துதித்து மிகுந்த கவலையுடன் கோயிற் றிருச்சந்நிதியின்முன் கிடந்து துயின்றார்.

முருகப்பெருமான் கனவில் தோன்றி, "அன்பனே! வருந்தற்க. நாளை சோழநாட்டில் விசிக்கும் ஓர் புலவன் வரும், அவனிடத்துள்ள வீரசோழியம் என்ற இலக்கண நூலில் சந்திப்படலத்தில் பதினெட்டாஞ் செய்யுளில் 'திகடசம்' எனப்புணர்தற்குவிதியுளது" என்றுகூறி மறைந்தருளினார். சுவாமிகள் விழித்தெழுந்து உள்ளம் உவந்து கந்தவேள் கருணையை நினைந்து மனங் கசிந்துருகி மலர்க் கணீர் சொரிந்து, காலை விதிப்படி வழிபாடு செய்து, அரங்கேற்றச் சபைக்கண் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறினார். அதுகேட்ட அவையோர் அதிசயித்து புலவர் வருகையை எதிர்நோக்கி யிருந்தார்.

குமாரக்கடவுள் ஓர் புலவரைப்போல் திருவுருக் கொண்டு கண்டார் மயங்கும் கவினுடன் ஆங்கு வந்தருளினார். அவைக்கணுள்ளோர் அவரைக் கண்டு வணங்கி, "தேவரீர் எந்த ஊர்? உமது திருக்கரத்துள்ள நூல் யாது?" என்று வினவினார். பெருமான் "யாம் சோழநாடு; இங்கு கந்தபுராண அரங்கேற்றங் காண்பான் வந்தோம். இது வீரசோழியம்" என்று கூறியருளினார். முன்னாள் மறுத்த புலவர் அவர் திருக்கரத்துள்ள நூலை வாங்கி சந்திப்படலத்தில் பதினெட்டாஞ் சூத்திரத்தில் விதியிருக்கக் கண்டனர். முருகவேள், "சபையீர்! உமது ஐயம் நீங்கிற்றோ" என்று கூறி மறைந்தருளினார். சபையார் யாவரும் கந்தவேள் கருணையையும் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுடைய

கற்பு.

சென்னியப்பன்:— "ஒருமனிதனுக்கு உயர்வும் உவப்பும் உண்டாகவேண்டுமாயின், அறிவும் அன்பும் உடைய மனைவியிருத்தல் வேண்டும். அசட்டுப் பெண்ணை மணந்து வாழ்வதினும் நரகில் வாழ்வதுவே நல்லது. ஆதலால், நாம் வெறும் அழகிற் சிறந்த மனைவியை மணந்து திண்டாடக் கூடாது. அறிவிற் சிறந்தவளை யாராய்ந்தே மணந்துகொள்ள வேண்டும்" என்று சிந்தித்தான். சென்னியப்பன் அறிவின் மிக்கவன்; நல்ல கட்டழகுடையவன். அவனுக்கு, ஒரு மச்சு வீடும், பத்து ஏக்கர் புன்செய் நிலமும் உண்டு. அவற்றைக் கொண்டு ஆடம்பரமின்றி அமைதியாகவும்,

---

பெருமையையும் எண்ணி வியப்புற்று சுவாமிகளைப் பன்முறை வீழ்ந்து பணிந்தனர்; புகழ்ந்தனர். தொண்டமண்டலம் இருபத்துநான்கு கோட்டத்து முதலிமார்களும் சுவாமிகளையும் புராண முறையினையும் யானைத்தந்தப் பல்லக்கில் வைத்து சகல உபசாரங்களுடன் தாமே தாங்கி நகர் வலஞ் செய்வித்து அரங்கேற்றம் முடிப்பித்து வணங்கினர். ஆசங்கை யுரைத்த புலவர் அடிகள் அடிமலர்மேல் வீழ்ந்து அபராத மன்னிப்பு கேட்டு அருள் பெற்றனர். சுவாமிகள், "நீர் மறுத்ததனா லல்லவோ பெருமானைத் தெரிசிக்கும் பேறு கிடைத்தது" என்று ஆறுதல் கூறி மகிழ்ந்தார்.

முன்னையோர் முத்திநலந் தந்தணன்றன் பொருட்டா
முதல்வனொரு வித்துவான் வடிவமதைக் கொண்டான்
பின்னையுமோர் முத்திதலத் தந்தணனுக் கென்றே
பிரான்மகனு மக்கோலம் பெட்புடனே கொண்டான்
என்னையீ ததிசயமென் றெல்லவரும் பேசி
ஏத்திடவே சோழியத்தின் விதிகாட்டி யிணைக்கத்
தன்னவனை யழைத்ததொரு சகக்குரவன் மறையோன்
தன்சரண மெனக்கரணந் தாறுக வளர்மே.

செட்டாகவும் இருந்தான். அவனுக்குப் பெண் தரவேண்டு மென்று பலர் அவாவினார்கள். அவனுடைய அழகும், அறிவும், அமைதியுமே அதற்குக் காரணம். அநேகர் அவனிடம் நேராகத் தங்கள் கருத்தைக் கூறி, தங்கள் புதல்வியரை மணக்குமாறு வேண்டினர். சென்னியப்பன், தான் விடுக்கும் மூன்று வினாக்க ளுக்கு விடைபகரும் பெண்ணையே மணப்பதாகக் கூறினான்.

1. மரம் மகிழும் மரமுகத்தான் யாவன்?
2. மரணம் எவனுக்கு, எப்பொழுது தித்திக்கும்?
3. இழந்துவிட்டால் எதனைப் பெறமுடியாது?

இந்த மூன்று கேள்விகளையும் எழுதி, தனக்குப் பெண்தர விரும்பு வோரிடந் தந்தான். அவரவர்கள் அதனைப்பெற்று, தத்தம் புதல் வியரிடந் தந்தனர். அப் பெண்கள் அதனை நோக்கி, ஒன்றும் அறி யாது விழித்தனர். சிலர் முதற்கேள்விக்கு "நாடகத்தில் மரத்தாற் செய்த முடிகளைப் பூண்டு வருபவன்" என்றும், இரண்டாவது கேள்விக்கு "நோயால் வருந்தும் நோயாளிக்கு மரணம் தித்திக் கும்" என்றும், மூன்றாவது கேள்விக்கு "இழந்துவிட்டால் பெற முடியாதது பணம்" என்றும் இப்படி சாரமற்ற பதில்களைக் கூறினர்.

சிலதினங்கள் கழிந்தன. விஜயபுரத்தில் எங்கும் இதே பேச் சாக இருந்தது. சிலர் "சென்னியப்பன் ஒரு புதுமனிதன். உலகில் எங்கு மில்லாத சில கேள்விகளைக் கேட்டு, பதில்கூறும் பெண்ணை யே மணப்பதாக முடிவுசெய் திருக்கிறான். இப்படி ஒருவரும் செய்ததில்லை. சுத்தப் பயித்தியம் பிடித்தவன்" என்று பரிகசித்த னர். முடிவாக அவ் வூரில் ஒருவர் தன் மனைவியிடம் இந்த செய்தி யைக் கூறிச் சிரித்தனர். அதனைக் கேட்ட அவர்மகள் வண்டார் குழலி "என்னப்பா! இவை பெரிய கேள்விகளா? ஒருகணத்தில் பதில் சொல்லுவேன்" என்றாள். உடனே அவர் ஓடி, சென்னியப் பனை நோக்கி "ஐயா! என்மகள் தங்கள் வினாக்களுக்கு விடை பகர்வதாகக் கூறுகின்றனள்" என்றார். சென்னியப்பனை அவர் தன் வீட்டிற்கு அழைத்தேகினர். சென்னியப்பன் மூன்று கேள்வி களையுங் கூறினான். வண்டார்குழலி உள்ளிருந்தவண்ணம் முறையே விடை பகர்ந்தாள்.

(1) வினா: மரம் மகிழும் மரமுகத்தான் யாவன்?
விடை: விநாயகர். "அரசு மகிழ் அத்தி முகத்தான்" அரசு என்பதும் அத்தி என்பதும் மரப்பெயராக இருப்பது காண்க. சிவபெருமான் மகிழும் யானைமுகம் உடையவர் என்பது கருத்து.

(2) வினா: மரணம் எவனுக்கு எப்பொழுது தித்திக்கும்?
விடை; மரணம் வள்ளலுக்கு, கொடுக்க முடியாத பொழுது இனிக்கும்.

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை." —வள்ளுவர்.

(3) வினா: இழந்துவிட்டால் எதனைப் பெறமுடியாது?
விடை: அவமே கழித்த வாழ்நாள்.

அறிவுக்கும் அநுபவத்திற்கும் ஒத்த இந்த அழகிய விடைகளைக் கேட்டு, சென்னியப்பன் உள்ளங் குளிர்ந்தது. அவளையே மணப்பதாகத் தீர்மானித்தான். தன் கருத்தையும் பெண்ணைப் பெற்றவரிடந் தெரிவித்தான். அவரும் இசைந்தார். குறிப்பிட்ட நாளில், சென்னியப்பனுக்கும் வண்டார்குழலிக்கும் மிக்க சிறப்புடன் இனிது திருமணம் நிகழ்ந்தது.

அறிவுடைய ஒருவன் அறிவுடைய ஒருத்தியுடன் வாழும் வாழ்வில் உண்டாகும் இன்பம் அளவிடற்பாற்றோ? இன்ப ஊற்றல்லவோ அது. இருவரும் அறிவு ததும்பும் உரைகளால் ஒருவரை யொருவர் இன்புறச் செய்தனர். எப்பொழுதும் அவர்கள் வீண் பேச்சுக்களையும், ஊர் வம்புகளையும் பேசுவதே கிடையாது. மொழிக்கு மொழி இனிக்கும் மதுர மொழிகளையே மொழிவர். அவர்கள் அன்புக்கடலில் நீந்திக்கொண் டிருந்தனர். இன்பமலையின் உச்சியில் செம்மாந்து மகிழ்ந்தனர். அவர்கள் தூய வாழ்வாகிய தருவில் அறிவுமலர்கள் பூத்தன; அருட்கனிகள் பழுத்தன.

சென்னியப்பன் தனது புன்செய் நிலங்களைப் பயிரிடுவித்து அதனால் சுகவாழ்வு நடாத்தினான். தன் வயலில் ஒரு பெரிய புளிய மர மிருந்தது. அதன் நிழல் பயிரின் செழிப்புக்குத் தடையாக இருந்தது. ஆதலால் அதில் பயிரில் நிழல்செய்யுங் கிளைகளை வெட்ட சென்னியப்பன் எண்ணினான். கூலியாட்களையும் மரம் வெட்டுதற்கு அமர்த்தினான். அன்றிரவு சென்னியப்பன் ஓர் திடுக்கிடும் பயங்கரமான கனவு கண்டான். ஓர் பெரிய பூதம் அவன்

கனவில் தோன்றி, "நான் அந்த மரத்தில் வாழ்கின்றேன்; ஆதலி னால் அதனை வெட்டாதே. மீறி வெட்டினாலும் பழையபடியே அம் மரம் என் சத்தியினால் இருக்கும்" என்று கூறி மறைந்தது. சென்னி யப்பன் திடுக்கிட்டெழுந்தான். மனைவியிடம் தான் கண்ட கன வைக் கூறினான். வண்டார்குழலி, "அன்பு நிறைந்த ஆர்வலரே! நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். குறிப்பிட்டபடியே போய் கிளைகளை வெட்டும். பிறகு விளைவதைப் பார்ப்போம்" என்றாள். பொழுது விடிந்தபின் சென்னியப்பன் கூலியாட்களுடன் வயலுக்குப் போய், அம் மரத்தின் கிளைகளை வெட்டி வீழ்த்தி, அவற்றை வண்டிகளிலேற்றி வீட்டிற்குக் கொணர்ந்தான். மறு நாள் அந்தப் பூதத்தின் சத்தியால் அம் மரம் முன்னிருந்தாற் போலவே தழைத்திருந்தது. அதனைக் கண்ட சென்னியப்பன் அதி சயித்தான். மனைவியிடங் கூறினான். வண்டார்குழலி, "நாதா! தாங்கள் தயங்க வேண்டாம். இன்றும் ஆட்களுடன் போய் கிளை களை வெட்டிக் கொண்டுவாரும்" என்றாள். சென்னியப்பன் அன் றும் கூலியாட்களுடன் போய் கிளைகளை வெட்டிக் கொணர்ந்த னன். மறுநாளும் மரம் பழையபடியே தழைத்திருந்தது. நாள் தோறும் கிளைகளை வெட்டி வெட்டிக் குவித்தான். ஒவ்வொரு நாளும் வெட்டும் கிளைகள் 30, அல்லது 40 ரூபாய்க்கு விற்பனை யாயிற்று. அதனால் அவனுக்கு நிரம்பச் செல்வங் குவியலாயிற்று. பூதம் அவனுடைய மனைவியின் அறிவையும், அவனுடைய ஆற்றலையுங் கண்டு வியந்தது.

பின்னர் தனது நிலங்களைத் திருத்தி கேழ்வரகுப் பயிரை நட் டான். கேழ்வரகு பயிருக்குத் தண்ணீர் அதிகம் இருக்கக்கூடாது. பூதம் அவன் கனவில் மீண்டும் தோன்றி, "உன் நிலம் முழுவதும் தண்ணீர் மயமாகச் செய்துவிட்டேன். கேழ்வரகு பயிர் விளை வதைப் பார்ப்போம். நஷ்டப்பட்டு கஷ்டப்படு" என்று கூறி மறைந்தது. சென்னியப்பன் விழித்து எழுந்தான். மனைவியிடம் கனவைக் கூறினான்; நிலத்தைப்போய் பார்த்தான்; வயலில் ஒரே தண்ணீர்மயமாக இருந்தது. உள்ளம் வருந்தினான். பிறகு சில தினங்களில் பயிர் அழுகலுற்றது. சென்னியப்பன் மனைவியிடங் கூறி வருந்தினான். வண்டார்குழலி, "அன்பரே! இதற்காக உள் ளம் வருந்தலாமா? வயல் முழுவதும் நீர் நிறைந்து இருக்குமானால் அது நன்செய்யாகி விடுமல்லவா? ஆதலால் உழுது சென்னெல் விதைத்துப் பயிரிடும்" என்றாள். சென்னியப்பனுக்கு மிக்க

மகிழ்ச்சியுண்டாயிற்று. உடனே உழுது நெல்விதைத்து விட்டான். நெற்பயிர் விளையலாயிற்று. கதிர் தோன்றியது.

பூதம், "நாம் வயலில் தண்ணீர்மயமாகச் செய்தது அவனுக்கு நன்மையாகவே முடிந்தது. இப்படி தீமையையும் நன்மையாக மாற்றிவிட்டது இவன் மனைவியின் அறிவு. இருக்கட்டும். இவனை ஒருகை பார்க்கிறேன்" என்று எண்ணி மனம் புழுங்கியது. பின்னர் நெற்பயிர் நன்றாக விளைந்தது. நாளை அறுவடை செய்ய வேண்டுமென்று சென்னியப்பன் நினைந்தான். அன்றிரவில் அவன் கனவில் பூதந்தோன்றி, "அட அசடே! அறுவடைசெய்ய நினைந்தனையோ? செய்; கட்டு ஒன்றுக்கு 2 மரக்கால் நெல்தான் காணும். மற்றநெல்லாம் பதராகப் போகக்கடவது" என்று கூறி மறைந்தது. சென்னியப்பன் துயிலுணர்ந்தெழுந்தான். மனைவியிடந் தன் கனவைக் கூறி, விடிந்ததும் அவளையும் அழைத்துக்கொண்டு வயலுக்குச் சென்றான். அறுவடைசெய்யும் ஆட்களும் வந்தனர். வண்டார்குழலி, "பிராணேச! முதலில் ஒருகட்டு கட்டத்தக்க அளவில் அறுத்து அடித்துப்பாரும்" என்றாள். அங்ஙனமே அறுத்து களத்திலிட்டு போரடித்தான். ஒரு கட்டுக்கு 2 மரக்கால் நெல்லே நேறியது. மற்றதெல்லாம் பதராகிவிட்டன. சென்னியப்பன், "கடவுளே! இத்தலைப் பாடுபட்டு என்கதி இப்படியாகவா முடியவேண்டும்" என்று கண்கலங்கினான்.

வண்டார்குழலி கணவனைத் தேற்றி, "காதலரே! இதற்காக வருந்துவது அறிவுடைமை யாகாது. அறிவின்பயன் அஞ்சாமையே. அடியேன் கூறியபடி செய்யும். பெரும்பயன் உண்டாகும்" என்றாள். சென்னியப்பன், "பெண்ணரசே! செய்வது யாது?" என்று கேட்டான். வண்டார்குழலி, "நாதா! வழக்கமாக சுமைகட்டுவதுபோல் கட்டாமல், இரண்டு இரண்டு தாள் ஒரு கட்டாகக் கட்டி யடியும்" என்றாள். அங்ஙனமே சென்னியப்பன், இரண்டு தாளை யறுத்துக்கட்டி அடித்தான். கட்டுக்கு 2 மரக்கால் காணும் என்று பூதங்கூறியபடி 2 மரக்கால் நெல்கண்டது. மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான். பின்னர் அந்நிலத்தில்விளைந்தவற்றை யெல்லாம் இருதாள்கள் ஒரு கட்டாகக்கட்டி யடித்து மலைபோல் நெல்லைக் குவித்துவிட்டான். பூதம் வண்டார்குழலியின் அறிவின் திறத்தை யெண்ணி, இத்தகைய அறிவுடைய மனைவியைப் பெற்ற சென்னியப்பனுக்குத் தீங்கு செய்வது பாவம் என்று எண்ணி அவர்களை வாழ்த்திவிட்டு நீங்கியது.

சென்னியப்பன் மரம் வெட்டுவதை விடுத்து, நன்செய்யாக மாறிய வயலை யுழுவித்து அதனால் வரும் ஊதியத்தை நிரம்பப் பெற்று,

"பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க"

என்றபடி பல ஏழைகளைப் பசியாறச் செய்து, தன் அறிவுடைய மனைவியுடன் இன்புற்று வாழ்ந்தனன்.

உ

முருகா.

"அமிர்தம் அருந்துவீர்!"

க. யாருண் டிங் கிவனைப்போற் சிலமுடை
யானென் றிவ் வுலகமெலாம்
நாருண்ட நலத்துடனே நல்லொழுக்க
நற்குணங்கள் நன்கமைந்தோன்,
பேருண்ட செந்தமிழிற் பிரசங்க
மழைபொழிநற் புலவரியன்,
சீருண்ட திருச்செந்திற் செவ்வேளின்
திருத்தாளே சிந்தித்தோன்.,

உ. அருளாசை யுற்றகவி ஆறுமுகன்
அருந்தாட்கு அளித்திடுவோன்,
தெருளாசை யுள்ளகிரு பானந்த
வாரி யெனும் திருப்பெயரோன்
பொருளாசை யற்றுதிருப் புகழமிர்தம்
வழங்குகிறான். புவிதலத்தீர்!
மருளாசை யில்லாது அமிர்தமதை
மனமுவந்து மாந்துவீரே.!

திருச்சிற்றம்பலம்.

— "சமரசச் சைவன்"
நெல்லை.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக்காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
கெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,
பட்டு-சேலை தினுசுகள்
சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

ஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,
ஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.

ட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

நம்பிக்கைபெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.



ஸோல்ஏஜண்ட்ஸ் யூனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு மதராஸ்.

தந்தி விலாசம் "செமந்தகா" திருச்சி.

கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப்படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். 1-க்கு 1—0—0.

பேசரி சைஸ் வைரம். 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:—

மோதிரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N. A.